
# இசையமுது

## இரண்டாந்தொகுதி



T17120
R005J04
T.17120

பாரதிதாசன்

# இசையமுது

## இரண்டாம் பகுதி

பாரதிதாசன்


பாரதிதாசன் பதிப்பகம்
— புதுச்சேரி —

இசையமுது: இரண்டாம் பகுதி
முதற் பதிப்பு: டிசம்பர் 1952

— விலை ரூபாய் ஒன்று —

இந்நூலின் பாடலையோ - பாடல் வரிகளையோ - ஆசிரியர் முன் ஒப்புதல் இன்றி எவரும் எங்கும் எடுத்தாளக்கூடாது.

பாரதிதாசன் பதிப்பகம்
— புதுச்சேரி —


பாரதிதாசன்

# முன்னுரை

இந்த இசையமுது இரண்டாந் தொகுதியில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் இதற்குமுன் தனித்தனியே வெளிவந்தவைகளே ; இருபதாண்டுகட்கு முன் எழுதப் பட்டவைகளையும் தேடி இதிற் சேர்த்திருக்கிருர் அலுவலகத்தார். இது படிப்பவர்கட்கே தெரியும் ; வட சொல் கலந்திருப்பதால் !

வேறு நூற்களை வெளியிடுவோர், அவற்றில் ஒரு நூற்படியுடன் என் நூற்படியையும் சேர்த்துக் கட்டடம் கட்டி விலைப்படுத்துகிருர்கள். இப்படிச் செய்ய நான் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு மட்டும் உரிமை தந்ததுண்டு. இதன் வாயிலாக மற்ற வெளியிடுவோரை, "அப்படிச் செய்யவேண்டாம்" என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் நூற்களில் சிலவற்றை, வெளியிடுவோர் பலருக்கு உரிமை கொடுத்திருக்கிறேன். ஆயினும் அவ்வுரிமை, அவர்கள் சுவடியாக மட்டும் அச்சிட்டு வெளியிடுவதற்கேயாகும். அவற்றிலுள்ள ஒரு பகுதியையோ முழுதையுமோ அரங்கு செய்தல்—நாடகம் சினிமா ஏடுகளில் வெளியிடுதல் கூடாது. அந்த உரிமையை என்னிடமே வைத்துக்கொண்டிருக்கிறேன். நாங்கள் முழு உரிமை பெற்றவர்கள் என்று கூறிக் கொண்டு என் நூலை வெளியிட எவருக்கும் உரிமை இல்லை.

புதுவை
13–12–'52.

பாரதிதாசன்

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| **காதல்** | |
| இங்கே உண்டு | 1 |
| ஆடவந்தாள் | 3 |
| திருமண வாழ்த்து | 5 |
| சோலைக் காட்சி | 6 |
| தலைவியின் நினைவு | 7 |
| வண்டும் மலரும் | 8 |
| நாணிக்கண் புதைத்தல் | 10 |
| நினைந்துருகல் | 11 |
| யார் இவள் | 12 |
| கண்டதும் காதல் | 14 |
| ஏந்திழை | 15 |
| தலைவி கூற்று | 17 |
| தோழி கூற்று | 18 |
| தலைவி கூற்று | 19 |
| தலைவன் கூற்று | 20 |
| **தமிழ்** | |
| நாடாண்டாயே | 21 |
| எது இசை ? | 22 |
| தமிழ்த் தொண்டு | 23 |
| முழங்கும் குறள் | 24 |
| தமிழ்த் தொண்டு | 26 |
| தமிழர் எழுச்சி | 28 |
| நிலவே | 30 |

| | பக்கம் |
|---|---|
| **பெண்கள்** | |
| அன்னையின் ஆவல் | 31 |
| ஆண்குழந்தை தாலாட்டு | 33 |
| பூத்தொடுத்தல் | 34 |
| புறவே | 35 |
| பந்தாடல் | 36 |
| **நாடு** | |
| வேங்கைக் குகையில் | 37 |
| எதற்கும் மேல் | 38 |
| மீட்சி எப்போது ? | 39 |
| எது தம்பி வேண்டும் | 40 |
| வாய்மை முரசு | 42 |
| விடுதலையே | 44 |
| **சிறுவர்** | |
| கல்வி | 45 |
| பிள்ளைக்கு நீதி | 46 |
| வறுமையிற் செம்மை | 47 |
| மாணவர்க்கு எழுச்சி | 49 |
| நல்லினஞ் சேர்தல் | 50 |
| வழி நடத்தல் | 51 |
| நிலாப்பாட்டு | 52 |
| தோட்டம் | 53 |
| சுகாதாரம் | 54 |
| **திராவிடர்** | |
| திராவிடர் | 55 |
| தாயகமே வாழி | 60 |

# திராவிடநாட்டுப் பண்

இசை—மோகனம் : தாளம்—ஆதி

வாழ்க வாழ்கவே
வளமார் எமதுதி ராவிடநாடு
வாழ்க வாழ்கவே !

சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறலும் செறிந்தநாடு (வா)

பண்டைத்தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலையாளம்
கன்டை நிகர்கன் னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்தநாடு (வா)

அள்ளும் சுவைசேர் பாட்டும் கூத்தும்
அறிவின் விளைவும் ஆர்ந்திடு நாடு
வெள்ளப் புனலும் ஊழித்தீயும்
வேகச்சிறும் மறவர்கள் நாடு (வா)

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு (வா)

அமைவாம் உலகின் மக்களை யெல்லாம்
அடிநாள் ஈன்ற அன்னை தந்தை
தமிழர்கள் கண்டாய் அறிவையும் ஊட்டிச்
சாகாத் தலைமுறை ஆக்கிய நாடு (வா)

ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்
சாற்றில் தென்றல் காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்
அழகில் கற்பில் உயர்ந்த நாடு (வா)

புனலிடை மூழ்கிப் பொழிலிடை யுலவிப்
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு
கனிமொழி பேசி இல்லறம் நாடும்
காதல் மாதர் மகிழுறும் நாடு (வா)

திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க
தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க
இங்குத் திரவிடர் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்தே எங்கள் நாடு (வா)



இசையமுது : இரண்டாம் பகுதி

# காதல்

# இங்கே உண்டு

——::——

எடுப்பு

போய்க் கொண்டிருந்தார்கள்—மேலும்
போய்க் கொண்டிருந்தார்கள் !

உடனெடுப்பு

மாய்க்கும் கொடுங்கதிர் மேற்குப் புறத்தினில்
போய்க் கொண்டிருக்கையில் பொன்னனும்
பொன்னியும் போய்க் கொண்டிருந்தார்கள்.

அடி

காய்க்கும் பலாவிலும் கள்ளி மிலாரிலும்
பொன்னொளி காணும்" என்றாள்—அவன்,
"சாய்க்கும் ஒளிப்புனல் யார்க்கும் சராசரி
தானடி" என்றுரைத்தான் ! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"சோட்டுப் புருக்களில் ஆணிடம் பெட்டையின்
தொல்லையைப் பாரும்" என்றாள்—அவன்,
"கேட்டதைப் பெற்றபின் இன்னுமத் தொல்லை
கெஞ்சிற்று வஞ்சி" என்றான் ! பின்னும் [யைக்
போய்க் கொண்டிருந்தார்கள்

"நல்லிதழ்த் தாமரைத் தேனுக்கு, வண்டுகள்
நாடுதல் பாரும்" என்றாள்—அவன்,
"செல்வரின் வீடு திறந்ததடீ பசி
தீரும் வரைக்கும்" என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"செவ்வலரிக் கொரு தீமையுண்டா? கண்
சிவந்தது பாரும்" என்றாள்—அவன்,
"அவ்விடம் முல்லை சிரிப்பதும், தன் நொச்சி
ஆடலும் நோக்கி" என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

"வாழுதல் எண்ணிஇவ் வையம் வெறுத்தவர்
வந்தனர் பாரும்" என்றாள்—அவன்,
கீழுலகத் துள இன்ப மெலாம் இவர்
கேட்டதும் இல்லை என்றான்! பின்னும்
போய்க் கொண்டிருந்தார்கள்.

# ஆடவந்தாள்

அவன் :

ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆடவந்தாள் ;

என்னோ டாட வந்தாள் ;
மகிழ்ந் தாட வந்தாள் ! (ஆ)

வாடாத தாமரைக்கை வானில் ஒளி தெறிக்க
மங்காத செங்காந்தள் விரல்கள் பொருள்குறிக்க (ஆ)

ஓடுபிளந்தசெம் மாதுளைபோல் உதட்டில்
உள்ளம் விளைத்தநகை மின்னவும்—கா
தோரத்து வண்டுவிழி ஓடைமலர் முகத்தில்
ஓடிஎன் உளங்கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை
காற்றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து
கடிதில் இடைதுவள ஆடியதோ என்னவும் (ஆ)

அவள் :

பொன்மேனி காட்டிஎனை இன்பத்தில் ஆழ்த்தினான்
பூரிப்பிலே எனையும் ஆடவைத்தான்

தன்னோ டாட வைத்தான்
மகிழ்ந் தாட வைத்தான் (பொ)

தென்றல்வரும் சந்தனப் பொதிகைமேல் அருவி
[போல்
தேனுன செந்தமிச் சிந்தொன்று பாடினுன் (பொ)

புன்னைமலர்க் காம்பு போன்றதோர் சிற்றடிப்பு
ருவும் மயிலும் களிஊன்றவே—அவை
பூணும் அசைவுகளிற் காணும் அழகினின்று
புதிய எண்ணம் ஒன்று தோன்றவே
அன்ன ஆடற்கலை உலகுக்களித்த தமிழ்
அரசர்பெருங் குடியைச் சேர்ந்தவன்
ஆடினேன் அவனே டாடினேன் உற
வாடினேன் மகிழ்ந்து கூடினேன். (பொ)

# திருமண வாழ்த்து

———:———

ஒருமன தாயினர் தோழி—இந்தத்
திருமண மக்கள் என்றும் வாழி!

பெருமன தாகி இல்லறம் காக்கவும்
பேறெனப் படும்பதி னாறையும் சேர்க்கவும்

ஒருமன தாயினர் தோழி!

மருமலர்த் தார்புனை மார்ப னோடும்
மழைபோற் கூந்தல் அழகன்னப் பேடும்
வருவார்என அந்தப் பஞ்சணை தேடும்!
வந்து வரைவார் இன்ப இலக்கிய ஏடும்!

ஒருமன தாயினர் தோழி!

இந்தநாள் போலே எந்தநூற் றாண்டும்
இன்பம் எனவே ஒவ்வோர் இமைப்போதும் தாண்டும்!
செந்தமிழ் நாட்டிடைத் தொண்டுகள் யாண்டும்
செயத்தக்க மக்களை இவர்பெற வேண்டும்

ஒருமன தாயினர் தோழி!

# சோலைக் காட்சி

—:—

**தலைவன் :**

தழுவின மலர்களை வண்டு பாராய்
தழுவின பறவைஇ ரண்டு மாதே.

**தலைவி :**

அழகிய கொடிகள் து வண்டு மேலே
அணைவன கிளைகளை வந்து நேராய்

**தலைவன் :**

மணமொடு பழகிய தென்றல் பாராய்
மகிழ்வன நமதிரு நெஞ்சம் மாதே

**தலைவி :**

அணைவன குளிரினை அந்தி மாலை
அதிவிரை வினிலும " தன்பு தேவை "

**தலைவன் :**

" கதிரவன் ஒளியொடு கொஞ்சும் வானே "
கடைவிழி திறஇள வஞ்சி மானே

**தலைவி :**

புதியதோர் சுவையினை இன்று நாமே
" பொழுதொடு நுகர்வது நன்று நாதா "

# தலைவியின் நினைவு

—::—

அன்றலர்ந்த செந்தாமரை—இவ்
வகிலமே புகழ்ந்திடும் அன்னவன் முகம் (அன்)

நின்றிருந்தேன் பின்புறமாய்
வந்து சடையை இழுத்தான்—என்
கன்னத்தையும் கிள்ளியே தன்
கைக்கு முத்தம் கொடுத்தான் (அன்)

(என்) மனம் எனப்படும் மணி மேடையில்
குடியேறிய மன்னன்—என்
வாழ்வெனப்படும் புறம் போக்கை
வளமே புரிவானோ!
கனி எனப்படும் என் தேனிதழ்
இனிதே சுவைப்பானோ
அவன்-கல கல வெனத் தமிழ் பேசிட
வருவானோ அன்னவன் முகம் (அன்)

கோடையிற் புனல் ஓடையைப் போல்
குளிரக் குளிரத் தழுவி—இக்
கோதை படும் வாதை எலாம்
குணமே புரி வானோ
வீடு தோறும் மாத ரெலாம்
விளக் கேற்றிடும் மாலை
வித வித விதக் கலவி செய்ய
வாரானோ அன்னவன் முகம் (அன்)

# வண்டும் மலரும்

அவள் :

செழுமலர் இதழ் கடை திறந்தது
தேன்விலை கொள்ள ஏன் வரவில்லை
வண்டே வண்டே

அவன் :

எழும் பலபல எண்ணம் என்னும்
சூறைக் காற்று மோதுகின்றதே
பூவே பூவே

அவள் :

கடலில் கலக்கும் காட்டு வெள்ளத்தை
காற்று மறிக்கும் ஆற்றல் உண்டோ
வண்டே வண்டே

அவன் :

விடு நினைவை விளை பயனில்லை
வீணு சைகள் ஏனோ இனி
பூவே பூவே

அவள் :

இளமை குறைந்து போனதோ எதிர்
கால நம்பிக்கை ஏனிழந்தாய்
வண்டே வண்டே

அவன் :

களர் நிலத்தினில் விளைச்சலை எதிர்
காலம் கொடுக்க ஏலுமோ என்
பூவே பூவே

---

குறிப்பு : இது தலைவியை மலடி என்று தலைவன் வெறுத்துக் கூறியதும், அவள் அமைவு கூறிக் கெஞ்சுவதும் ஆகும்.

# நாணிக்கண் புதைத்தல்

தாமரை முகத்தினைத் தளிர்க்கரம் மறைத்ததடி—
இளந்தையலே
பூமது வருந்திடும் புதுவண்டுபோல் மனம்
புழுங்குதடி மயிலே, வழங்கும் தமிழ்க்குயிலே!
(தாமரை)

விழிமலர் மறைத்ததில் கழிமயல் ஆகுதடி—
இளந்தையலே
பிழிந்த அமுதத்தைப் பிசைந்த கனிரசத்தை
விழுந்து புசித்துவிடின் ஒழிந்து விடுமெனவே
(தாமரை)

நாணப்படுவதிங்கு நாணயமில்லையடி—இளந்தையலே!
காணப்படும் நிலவைக், கரம்பொத்திவிடுவதில்
ஆணழகன் சகித்தல் அருமை அருமையடி!
(தாமரை)

மலர்க்கொடி விலக்கடி மதிமுகம் மறைத்தகரம்—
இளந்தையலே!
இலக்குத் தவறுதடி என்முகம் உன்முகம்
இணைத்திணைத் திழுத்திழுத் தணைத்தணைத் தமு
[தளி! (தாமரை)

# நினைந்துருகல்

———:: ———

எடுப்பு

செந்தேனோ தமிழோ அவளுதவிய சுகம்! (செந்)

உடனெடுப்பு

முந்தோர் நாள் தானே வந்தெதிர்
குளிர் சோலையில் முழு நிலவினில்
கொண்ட காதல் மிகவாகிச் சிலீரெனக்

கோ-கனகவி தழ்குவிய முகமே என
தொருமுக மிசையுற. மலருடல் எனதொரு
புளகமெய் தனிலுற இருவரொருவராக ஆவலொடு

கொஞ்சித்தந்த வஞ்சி முத்தம்
கொஞ்சத்தினில் நெஞ்சைவிட்டு
நிமிஷமும் அரை நிமிஷமும்

விலகுதல் அருமை விரைவினில் அவள் பிரி
வினை மனது பொறுத்திடுவது சுகம் வெறுப்பதுவாகும்—
[நறுஞ் (செந்)

அடி

சுந்தராங்கி அமுதங் குழல்போல் மொழியாள்
சுகுணாலயம் அன்னவள்!

எந்த வனிதை அவளோ டிணைபெற வருவாள்?
கந்த கலப உடலாள்! அதிசோபித
கண்ய மான அதி புண்யவதி சுநிதி! (செந்)

# யார் இவள்

(வண்ணம்)

ஸ்ரீமதிஇவ ளார்? உலகிடை மானிடமதி லேதிவள்? ஒரு
சேலிணையினை நேரிருவிழி, கோகனகவி நோதஅதரம்,
மாமதிநிகர் ஓரிளமுகம், வானுறுமழை தானிருள் குழல்,
வாழ்மதுகரம் ஊதிடுமலர் சூடியமுடி யோடிவளிரு

மத்தக மொத்த னத்தொடு சித்தமி
னித்திட நிற்பது மிக்கவும் அற்புதம்!
மலர்வாய் திறந்தொரு வார்த்தை சொல்லாளோ?

தோய்மதுமலர் மாலையைநிகர் ஆகியஒரு தேகவனிதை
தீவிரநடம் ஆடியமயி லேஎனுமொரு சாயலினெடு
மாசறுகலைமானெனமருள் வாளவள்நடையோ அனநடை
வாழுலகினி லேஇவளரு ளாலதிசுக மேபெருகிடும்!

வைத்திடு புத்தமு தத்தையெ டுக்கம
றுத்திடல் மெத்தவ ருத்தமெ னக்குறும்!
மதுவோடையை மொண்டுண வாக்கு நல்காளோ?

மாமயலெனும் ஓர்அனலிடையே எனதுளம்
[நோயடைவதை
மாதிவளறி யாள் இதைஎவர் போயவளிடமே புகலுவர்?
ஆம். அவள்தரு வாயிதழமுதே இதுததி மா அவுஷதம்!
ஆவியுமவளே உடைமைக ளாதியுமவ ளேயுலகினில்!

அற்புத சித்திர சிற்பநி லேக்கொரி
லக்கியம் வைத்தசி றப்புமி குத்திடும்
அழகாகிய வஞ்சியென் வீட்டை நண்ணுளோ ?

நாமுறுதமிழ் நாடெனுமொரு தாயுறுபுக ழோ !
[இனிதென
நாவலர்களு மேதுதிநிதம் ஓதிடுதமி ழோ ! நவநிதி
யோ ! முழுநில வோ ! கதிரவ ேனே ! கவிதையி
[லேவருசுவை
யோ ! இதுகன வோபுதுயுக மோ ! வடிவழ கே வடிரசம்

மக்கள் உயிர்க்குறு நற்பதம் இப்படி
வைத்த தெனச்சொல விட்டசு கக்கடல் !
மனமே இனும்பொறு வீழ்ச்சி கொள்ளாதே !

# கண்டதும் காதல்

எடுப்பு

களிப்பில் ஆடும் கான மயிலோ
காதாரும் பண் பாடும் குயிலோ ? (களிப்)

உடனெடுப்பு

துளிக்கும் மது மலரின் தேகம்
சுகம் தரும் இவள் அளிக்கும் போகம்! (களிப்)

அடி

பளிக்குமேனி கண்டு மனந்தத் தளிக்குதுடல்
கொப்பளிக்குதே !
ஒளிக்குதே இம் முகவிலாசம் உளத்தில் மோகம்
[தெளிக்குதே !
வளர்க்கா தெழில் வளர்ந்த ரூபம்
வையம் விளங்க ஏற்றும் தீபம் ! (களிப்)

கலைத்துக் கலைத்து வரைந்த சித்ரமோ
கவினுறும் விழி வேலோ !
ஒலிக்கெலாம் உயிர் தரும் இவள் மொழி
இனிப்புச் சேர்த்திட்ட பாலோ !
தலைக்கேறுதே கொண்ட மோகம்
தகிக்குதே இதென்ன வேகம் ! (களிப்)

# ஏந்திழை

—:—

எடுப்பு

இன்பம் இன்பம் அடடா—அவ்
வேந்திழையைக் காணுந்தோறும்

உடனெடுப்பு

அன்னம் நடக்கும் நடையும்—அருகே
அன்னாள் அழகிய நடையும் (இ)

அடி

வஞ்சிக் கொடியும் அசையும்—அருகே
மங்கை சிற்றிடை அசையும்
நெஞ்சந் தன்னில் அதுதான்—காதல்
நெருப்பை இட்டுப் பிசையும் (இ)

கோவைக் கனியும் சிவக்கும்—அருகே
கோதை இதழும் சிவக்கும்
யாவும் அவளுக் கீவேன்—எனநான்
எண்ணிடும் எண்ணம் உவக்கும் (இ)

பச்சைக் கிளியும் கொஞ்சும்—அருகே
பாவையின் உதடும் கொஞ்சும்
மெச்சும் போதே அடடா—மங்கை
மீதினில் மையல் மிஞ்சும் (இ)

விண்ணில் நிலவும் ஒளிரும்
மெல்லியின் முகமும் ஒளிரும்
கண்ணில், கருத்தில் அதுதான்—காதற்
கவிதை காட்டி மிளிரும். (இ)

கருத்துரைப் பாட்டு.

# தலைவி கூற்று

—::—

**பிரிவிடைமெலிந்த கிழத்தி சொல்லியது**

செல்லார் என்றுநான் நினைத்திருந்தேன்—செல்லென்று
சொல்லாள் என்று தாம் நினைந் தகன்றார் (செ)

அல்லல் உடையதென் உள்ளம்
அதுவன்றி மயக்கமும் கொள்ளும்
பொல்லாத எங்கள் ஊக்கம் விளைத்தபோர்
நல்ல பாம்பு கௌவிய தாயிற்றே (செ)

(குறுந்தொகை 43. ஔவையார் பாட்டின் கருத்து)

கருத்துரைப் பாட்டு.

# தோழி கூற்று

—::—

**கடிது வருவார் என்று ஆற்றுவித்தது**

அம்மா உன்மேல்—அவர்
அதி விருப்பம் உடையவர் (அம்)

செம்மையாய் விரைவில்
திரும்பினும் திரும்புவார்
திரும்பி வந்தின்பம்
நல்கினும் நல்குவர் (அம்)

அன்றவர் சென்ற வழியில்
ஆண்யானை, பெண்யானையின் பசியை
நின்ற யா'மரம் உரித்தூட்டல் காண்பார்
நின்நிலை எண்ணி இன்றே திரும்புவார் (அம்)

(குறுந்—37 பாலைபாடிய பெருங் கடுங்கோ பாடற் கருத்து)

கருத்துரைப் பாட்டு.

# தலைவி கூற்று

பொருள்வயின் பிரிந்த இடத்துத் தலைவி ஆற்றுமை கண்டு தோழி சொன்னது

நினையாரோ தோழி?
திணையேனும் எனை
நினையாரோ தோழி?

நினைவா ராயின் எனை யாள வருவார்!
நினைக்கிலார்! இனியேனும்என் நெஞ்சம் களிக்க
நினையாரோ தோழி!

தீவேடன் அன்பின் இரும்புமுனை தீட்டும் ஒலிபோல்
செங்காற் பல்லி துணையினை அழைப்பது கேட்டும்
ஆய அக் கள்ளிக்காட்டு வழிச்செல்பவர் மீட்டும்
அணுகாரோ அணுகாவிடில்
அதுவென் நெஞ்சை வாட்டும்
நினையாரோ தோழி!

(குறுந்–16. பாலை பாடிய பெருங் கடுங்கோ பாடற் கருத்து)

கருத்துரைப் பாட்டு.

# தலைவன் கூற்று

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின் பிரிவர் என்று
கருதி அஞ்சிய தலைமகட்குத் தலைவன் கூறியது

என் தாய் யாரோ !
உன் தாய் யாரோ !—பெண்ணே
என் தந்தை உன் தந்தை உறவினர் அல்லரே

இன்றிங் கேஉனை எவ்வா றடைந்தேன் ?
நீஎன்னை எவ்வா றறிந்தாய் ?—நாம்
செம்மண் நிலமும் பெய்த மழையும்போல்
சேர்ந்தோம் அடடா இன்பம் ஆர்ந்தோம் (எ)

இரண்டு நெஞ்சில் வீறிட்ட காதலே
இருவரை யும்சேர்த்த திவ்வையமீதே
மருண்ட மக்கள் மாப்பிள்ளை பெண்களை
மணத்தில் கூட்டுவ தாக எண்ணுவார் (எ)

(குறுந்தொகை 40. செம்புலப்பெயனீரார் பாடற் கருத்து)

இசையமுது : இரண்டாம் பகுதி

# தமிழ்

# நாடாண்டாயே

நாடாண் டாயேத மிழேநீ
ஞாலம் ஆண்டாய் வாழ்வும் ஈந்தாயே!

ஏடுயாவும் நீயே, மக்கள் எண்ணம்
எவைகளும் நீயே பகை தீர்ந்தே (நா)

நாடு மீளவே கேடு தீரவே
நாமினி இலங்கி நனி வாழவே (நா)

இனிதாகிய தமிழே எனதுயிரே
இளைஞர்க்கிடை மூளுகின்ற உணர்வே!

கனியினும் மிகுசுவையே உனைநான்
காணுப்போது கவலை மிகுந்திடுதே

கனல்நிகர் ஆரியர் நலியேசெயினும்
கலையாவும் வெந்துபோகச் செயினும்

புனலிடைத் தமிழ்நூற்களெலாம் போயினும்
புதுமை இளமை எனும்படி (நா)

# எது இசை?

—::—

தமிழ் பாடல் முறையா, நாட்டிலே

கண்,

வாயைக் காட்டல் முறையா?
எது முறை சொல்க மனமே!

தமிழ் பேசுவார்க்குத் தீந்தமிழினிதோ
தாங்களறியாத பிறமொழி பாடுதல் இனிதோ

மொழி பொருள் மிகநன்றுய்க் காட்டுதல் கவியா?—
விழிபல் உதடுகாண அதட்டல் கவியா? [தம்

பிழைபட நிந்தனைபட நடப்பது நலமா?
பெருமை ஓங்குமாறு தமிழைப் போற்றுதல் நலமா?
(த)

# தமிழ்த் தொண்டு

—::—

தமிழ்என்னும் மணிவிளக் கேற்றடா நாட்டில்
தமிழரின் நெஞ்சமாம் அழகான வீட்டில்!
அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை (த)

தமிழ்என்ற உணவினைக் குவியடா யார்க்கும்
தமிழருக் கிங்குள்ள குறையெலாம் தீர்க்கும்
சமமாக ஆற்றடா தமிழூழியத்தைச்
சகலர்க்கும் ஆற்றடா தமிழூழியத்தை. (த)

தமிழென்ற வன்மையைக் கூட்டடா தோளில்
தமிழர்க்கு நலமெலாம்வரும் ஒரே நாளில்
அமைவினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே
அன்பினால் புரியடா செந்தமிழ்த் தொண்டு. (த)

தமிழ்என்னும் உணர்வினைச் சேரடா எங்கும்
தமிழரின் ஆட்சியே உலகெலாம் தங்கும்
இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய் (த)

# முழங்கும் குறள்

—::—

முழங்கிடுகின்றதே அறம்! (மு)

முட்டுப்படும்உலகே இனவேற்றுமை
பட்டுக்கெடும் உலகே நம்திருக்குறள் (மு)

" உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன் " எனல்கேட்டீரோ

வாய்மை அடிப்படை மக்களைச் சேர்க்கும்
மாண்பிலா ஆட்சி யாளரை நீக்கும்
தாய்மொழி தன்னையும் மீட்டுக் காக்கும்
தள்ளத் தகாத்திரு வள்ளுவர் வாய்மொழி (மு)

" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் " எனல்கேட்டீரோ

ஒற்றுமை ஒன்றினுல் அச்சம் பறக்கும்
ஊருக் குழைப்பதோர் வீரம் பிறக்கும்
சற்றும் பிசகாமல் எண்ணிய நலங்கள்
சாரும்என்று திரு வள்ளுவரின் குறள் (மு)

" துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின் " எனல்கேட்டீரோ

நாட்பட்டுப் போனஓர் சட்டத்திலே ஒரு
நல்லது செய்யாத சட்டத்திலே
ஆட்பட்டுப் போகாமல் ஒற்றுமையாயதை
ஆற்றலில் மாற்றுக என்று திருக்குறள் (மு)

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்" எனல் கேட்டீரோ?

அஞ்சத் தகுந்ததற் கஞ்சுதல் வேண்டும்
அஞ்சத் தகாததற் கஞ்சிட லாமா?
கெஞ்சினுல் மிஞ்சுவர் கேடாள வந்தார்
கிளர்ச்சி தேவைஎன் றுணர்த்திய திருக்குறள். (மு)

# தமிழ்த் தொண்டு

இயற்கை அன்னை அருளிய இன்தமிழ்!
அயல்மொழி வேண்டாஆர் எழில் சேர் தமிழ்!
நிறைதமிழ்! இந்நாள் நெடுநிலம் முழுதும்
குறைவில தென்று குறிக்கும் தனித்தமிழ்!
தமிழர் வாழ்வின் தனிப் பெருமைக்கும்
அமைந்த சான்றும் அமுதுநேர் செந்தமிழ்!
அந்த நாளில் அறிவுசால் புலவர்
எந்தநாள் தோன்றிய தோ எனும் பழந்தமிழ்!
தமிழ்நாடு பலப்பல தடுப்பரும் இன்னலில்
அமைந்தும், அணுவும் அசையாப் பெருந்தமிழ்!
தமிழை அழித்தல் தமிழரை அழிப்பதென்று—
இமையாது முயன்ற அயலவர் எதிரில்,
இறவாது நிற்கும் ஏற்றத் தமிழின்
பெருநிலை எண்ணுக தமிழ்ப்பெரு மக்களே!
அருஞ் செல்வர்கள் அன்று தொடங்கி
இன்று வரைக்கும் ஈந்து வந்துள்ள
பொன்று ஆதரவு—அன்றோ காரணம்?
அயல்மொழி எல்லாம் அண்டையில், கண்ணெதிர்
வியக்கு முறையில் மேன்மை பெற்றன;
என்ன முயற்சி! எத்தனை ஆர்வம்!
இன்ன வண்ணம் இருக்கையில், நம்மவர்
தமிழிடம் காட்டும் தயவு போதுமா?
தமிழ்த்தாய் பூசை போதுமா? சாற்றுக!
“ தமிழர் பொருளெலாம் தமிழுக்குத் தந்தார் ”

தமிழை யுயர்த்தினுர் தாமுயர் வுற்ருர் ''
என்றசொல் நாட்டிஞல், இறவா நற்புகழ்
நன்று வாய்ந்திடும் என்ற நடுக்கமோ ?
தமிழின் தொண்டு தரித்திர வயிற்றுக்கு—
அமிழ்தம் அன்ரே அண்ணன்மாரே !

ஆவன தமிழுக் காற்றுதல் சிறிதே,
ஈவது சிறிதே இன்ப மொழிக்கு !
வருத்தச் சேதி இஃதொன்று மட்டுமா ?
ஒருவர் ஒன்று தமிழ்நலம் உன்னி
இயற்ற முன் வந்திடில், இடையூறு பற்பல
இயற்ற முன்வருவதை என்ன என்பது !

சேர்ந்து தொண்டாற்றுதல் சிறப்பா ? அன்றிக்
காய்ந்தும், முணுத்துக் கசந்தும் கலகம்
செய்தும் திரிதல் சிறப்பா ? செப்புக !
குள்ள நெஞ்சினர் கொடுமை செய்வதைத்
தெள்ளிய நெஞ்சினர் தீர்த்தும், தமிழில்
அன்பிலாத் தமிழரை அன்பில் தோய்த்தும்,
தென்பா லெழுந்த தீந்தமிழ்ச் சுடரை
வானிடை எழுமோர் வண்மைச் சுடராய்ச்
செய்யமுன் வருக தமிழரே,
உய்ய நம்மவர்க்கிங் குறுதுணை அஃதே !

# தமிழர் எழுச்சி

—:—

உயர்தமிழ் உயர்நடை உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை!
அயர்வுகள் தீர்ந்தன புதுமையில் உலகை
ஆள்வது தமிழர்கள் கடமை!
புயல்நிகர் பகைமையும் வேரொடு மாளும்
தமிழர்கள் சமரிடைப் புகுந்தால்!
வெயில்முகம் சுளித்தால் அகிலம் தூளாம்
மேன்மையை முழக்குக முரசே!

பழமையில் இங்குள அன்புறு காதற்
பயனுறும் அகப்பொருள் காப்போம்!
அழகிய தமிழ்நடை யாற்புதி யனவாய்
ஆயிரம் கலைநூல் சேர்ப்போம்!
அழுதிட ஒருவன்மற் றொருவனை மேய்க்கும்
அதருமம் அனைத்தையும் மாய்ப்போம்!
முழுதுல கப் பயன் உலகினர் சமம்பெற
அன்பினில் மனிதரைத் தோய்ப்போம்!

முழக்குக எங்கணும் முழக்குக முரசே
முழக்குக தமிழர்கள் பெருமை!
வழங்கிடும் அங்கையர் வாளுயர் தோளினர்
வாய்மையின் வாழ்பவர் தமிழர்!
எழுந்துள வீரம் தமிழரின் மூச்சில்
எழுந்தது வாமென முழக்கே!

அழுந்துதல் இல்லை உலகுள்ள வரைக்கும்
அன்புத் தமிழர்கள் வாழ்வு!

மணிமுடி மறவர்கள் முழுதுணர் மேலோர்
மாபெருங் கவிஞர்கள் கூட்டம்.
அணிமுடி காதல் மகளிர்கள் கூட்டம்
ஆவது தமிழர்கள் ஈட்டம்!
பணிகுதல் இல்லை அஞ்சுதல் இல்லை
பாய்ந்திடும் ஒற்றுமை யாலே!
தணியாக் காதல் நிறைவா மீண்டும்
தமிழர்க் கிப்புவி மேலே

# நிலவே

—:—

நிலவே நீ முன்நடந்ததை கூறுவாய்!
மெய்யாய்க் கூறுவாய்

இலகு செந்தமிழையும் உன்னையும் கூட்டி
இயற்கை அன்னைவளர்த்த திலையோ பாலூட்டி

சங்கமேறித்தமி ழுலகிருள்போக்கித்
தாவியெழில் வானமிசை நீயுலவத்
தமிழ்வாழ்த்தி உனைவாழ்த்தி மக்கள் வாழ்வு
தொடங்கியதை மறந்தனையோ குளிர்ந்த
[வெண்ணிலவேநீ!

வடமொழிக்குதவி தமிழ்மொழி அன்றோ?
மறுமொழி கூறுதிருப்பது நன்றோ?
கடல்சூழ் வையம் ஆண்டது தமிழோ?
கையேந்தி வந்தவர் பேசிய மொழியோ? (நில)

ஆரியர் ஆட்சி வாய்ந்த பின்னை
அழகிய தமிழ்நூ லாகிய பொன்னை
வேரொடு மாற்றிட வஞ்சம் என் னென்ன
விளைத்தார் அதைத்தான் கேட்டேன் உன்னை. (நில)

இசையமுது : இரண்டாம் பகுதி

# * பெண்கள் *

# அன்னையின் ஆவல்

—:—

காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து
கையில் விரித்தகுடை தூக்கி—நல்ல
கல்விக் கழகமதை நோக்கிக்—காய்ச்சும்
பாலுக்கு நிகர்மொழிப் பாவைநீ செல்லுவதைப்
பார்க்கும் இன்பந்தானடி பாக்கி

மேலுக்குச் சட்டையிட்டு மெல்லியசிற் றுடைகட்டி
வீட்டினின்றும் ஆட்டமயில் போலே - கைம்
மேற்சுவடி யோடுதெரு மேலே—கூர்
வேலுக்கு நிகர்விழி மெல்லிநீசெல் வதைக்காண
வேண்டுமே இப் பெற்றவள்கண் ணாலே

ஓவியம்கற் றுள் உன்மகள் காவியம்கற் றுளெனவே
ஊரார் உன் றனைமெச்சும் போது—கண்ணே
உவகைதான் தாங்குமோஎன் காது ?—நீஓர்
பாஎழு தும்திறத்தால் ஊர் அமைதி கொண்டதென்று
பாரோர் புகழ்வ தெந்நாள் ஓது ?

மாவடு நிகர்விழிச் சின்னஞ் சிறுமியே நீ
மங்கை எனும்பருவம் கொண்டு—காதல்
வாழ்வுக்கோர் மாப்பிள்ளையைக் கண்டு—காட்டித்
"தேவை இவன்" எனவே செப்பும் மொழி எனக்குத்
தேன் ! கனி ! தித்திக்குங்கற் கண்டு.

பூவும் நறுமணமும் ஆவியும் உடலும்போல்
பொன்னேஉன் அன்பனெடு சேர்ந்து--சிறு
புன்மையும் இல்லாமல் அறம் சார்ந்து—பூங்
காவில் உலவுவது காணக் கிடைத்திடுமோ
கண்ணே சொல்லடி அன்பு கூர்ந்து

சேவல்என நிமிர்ந்து சிறுத்தையெனப் பகையைச்
சீறும் குழந்தைகளைப் பெற்றே—நீ
செல்வம் பலவும் மிக உற்றே—நல்ல
காவல் இருந்துவளந் தாவும் திராவிடத்தைக்
காப்பது காண வேண்டும் சற்றே

# ஆண் குழந்தை தாலாட்டு

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ
ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ
சீராரும் இன்பத் திராவிடனே எம்கரும்பே
ஆரா அமுதேஎன் அன்பேநீ கண் வளராய்.

ஆரியர்கள் இங்கே அடிவைக்கு முன்னமே
வேரிட்டு வாழ்ந்த வெற்றித் திராவிடரின்
பேரர்க்குப் பேரனே பிள்ளாய்நீ கண்ணுறங்கு!
சேர அரிதானசெல்வமே கண்ணுறங்கு!

வெண்டா மரையில் விளையாடும் வண்டுபோல்
கண்தான் பெயரநீ என்ன கருதுகின்றாய்?
பண்டைத் திராவிடத்தின் பண்பு குலைக்க இனி
அண்டைப் பகைவர் நினைப்பரெனும் ஐயமோ

தொண்டு விரும்போம் துடைநடுங்கோம் எந்நாளும்
சண்டையிட்டுத் தோற்றதில்லை தக்க திராவிடர்கள்
எண்டிசையும் நன்றறியும் அன்றோ இனிக்குங்கற்
கண்டே கனியே எம் கண் மணியே கண் வளராய்

தங்கம் உருக்கித் தகடிட்டுப் பன்மணிகள்
எங்கும் அழுத்தி இயற்றியதோர் தொட்டிலிலே
திங்கள் திகழ்ந்ததெனும் வெண்பட்டு மெத்தையின்மேல்
மங்கா உடல் மலரும் வாய் மலரும் கண் மலரும்

செங்கை மலரும் சிரிப்பின் எழில் மலரும்
தங்கா தசைந்தாடும் தண்டை இரு கால் மலரும்
அங்கங் கழகுசெய்யும் ஆணழகே கண் வளராய்
எங்கள் மரபின் எழில் விளக்கே கண் வளராய்!

# பூத்தொடுத்தல்

—::—

**தலைவி :**

விருந்து வரக் கண்ட
மெல்லி முகம்போல், முல்லை
யரும்பு மலர்ந்த தென்ன வேடிக்கை

**தோழி :**

தெரிந்தவரைக் கண்டாலும்
தெரியாதாரைக் கண்டாலும்
சிரிப்பதுதான் இதன் வாடிக்கை

**தலைவி :**

தங்கத்தில் அச்சிட்டுச்
சரிபார்த்து மெருகிட்டு
மங்கா இயற்கை தந்த சாமந்தி

**தோழி :**

இங்கே இதுவுந்தான்
மஞ்சளுக் கவளப்பன்
சரக் கொன்றை பார்இ தைமுந்தி

**தலைவி :**

அரளி மாணிக்கம் போன்ற
அலரி மருக் கொழுந்தும்
அடுக்கடுக்காய் வைத்துத் தொடுப்போம்

**தோழி :**

ஒரு விரற் கடை பச்சை
ஒரு விரற் கடை வெள்ளை
இப்படியே தொடுத்து முடிப்போம்.

# புருவே

—:—

தன்போல் மற்றொன்றைத் தான்உண் டாக்குதல்
மன்னுயிர்க் கெல்லாம் இயல்போ புருவே?
இன்பம், குழந்தையைப் பெறுவது தானோ?
வளர்ப்பதும் இன்பமோ மாடப் புருவே?

உயிரில் கலந்த உணவையும் கக்கியே
ஊட்டிடு கின்றதும் இன்பமோ புருவே?
மயல்தீர் வாழ்வில் இன்பத்தின் அடிப்படை
மக்களைப் பெறுவதோ மாடப் புருவே?

மக்களின் மலருடல் தொடுவதும் இன்பமோ?
மழலை மொழியும், குழலோ புருவே?
மக்களில் லாதார் வாழ்க்கை விழலோ
மனநலம் வாய்ந்த மாடப் புருவே?

# பந்தாடல்

—::—

**தலைவி :**

அடித்த பந்தினை மறித்துப் பிடிக்க
ஆகாதடி மாதே
ஆகாதடி

**தோழி :**

பிடித்துப் பந்தினை திருப்பினேன் அடி
நீ பாரடி மாதே
நீ பாரடி

**தலைவி :**

அங்குவந்த பந்துன் திங்கள் முகத்தொடு
போராடுதே மானே
போராடுதே

**தோழி :**

மங்கை என் பந்துப றந்ததுன் மார்புக்கு
நேராகவே மானே
நேராகவே

**தலைவி :**

தாக்கிடும் என்பந்து பார்த்துத் தடுத்துக் [கொள்
நேராகவே தோழி
நேராகவே

**தோழி :**

தூக்கி அடித்தேனே பூப்பந்து பாரடி
தோள் மீதிலே தோழி
தோள் மீதிலே

இசையமுது : இரண்டாம் பகுதி

# * நாடு *

# வேங்கைக் குகையில்

நீள் வையம் எதிர்த் திடினும்—அஞ்சுதல் இல்லாத்
தோள் வாய்ந்த மூவேந்தர்—சீர் ஆட்சி,

நாள் என்ற கடல் வெள்ளம் தான் கொண்டு போனதே
கோள் வாய்ந்த பெருந்தீயர் வரவால் இருளானதே !

யாவரும் ஒன்றே என வாழ்ந்தோமே நாங்கள்
இனம் சாதி மதவெறி அலங் கோலம்,

மேவி வீழ்ச்சி நிலை அடையவும் ஆனதே
வேங்கைக் குகைக்குள்நரி வாழ்ந்திடவும் ஆனதே.

# எதற்கும் மேல்

தமிழ் நாடுதான் மேலான நாடு
தமிழர்க் கெல்லாம் மற்றவை காடு (த)

கமழ் தென்றலே நடமாடு நாடு
காவிரி நீள்வைகை பாயும் நாடு (த)

கன்னல் மா பலாவும் வாழை கமுகு
செந்நெல் யாவுமே மலிகின்ற நாடு (த)

பொன்னின் வார்ப்படம் போல் மாதரோடு
போர்புரி மாவீரர் வாழும் நாடு. (த)

# மீட்சி எப்போது?

காலைமுதல் மாலைவரை ஏருழவர்
பசியால் மெலிந்து நோயினில்வாடி (கா)

தோலைமூட ஆடைஏதும்இல்லையே—உடல்
தூய்மைக்கும் யாதொருவழியுமே இல்லையே (கா)

அண்டி வாழ ஒருவீடில்லை. பிள்ளைகள்
கல்வி அடையவோ வழியில்லை. மீட்சியும்
கண்டதில்லை. நாளுமே வீழ்ச்சி எனில்
கோரும் பொதுவாழ்வு தூய்மை பெறுமா? (கா)

# எது தம்பி வேண்டும்

கொல்லையிலே ஒரு சிட்டு—நல்ல
கூட்டினிலே ஒரு கிள்ளை
சொல்லும் இவற்றினில் யாது?—நீ
துன்பம் இல்லாதது கூறு!
முல்லையிலே ஒரு வண்டு—பண
மூட்டையின் மேலொரு செல்வன்
இல்லை என்னாத நல்வாழ்வை—நீ
இந்த இரண்டில் விளக்கு.

கோயிலில் பார்ப்பனர் வேதம்—குப்பை
கூட்டிடுவாள் தமிழ்ப்பேச்சு,
தூயது யாது சொல் தம்பி—அன்றித்
தொல்லை விளைப்பது யாது?
வாயிலிலே கொஞ்சும் ஏழை—சிலை
வார்க்கும் திருப்பணி யாளன்
ஈய நினைத்திடும் காசை—நீ
யாருக்கு நல்குவை தம்பி!

ஊருக்குழைத்திடக் கேட்டார்—உனை
யோகம் புரிந்திடச் சொன்னார்
யாருக் குடன் பட எண்ணம்—நீ
இந்த இரண்டினில் தம்பி?
கார் விதைக்கும் தொழிலாளி—நேர்
கையை வேண்டிடும் சைவன்

யாரப்பனே நலம் செய்வோன்—உரை
இந்தப் பெரு வையத்திற்கே?

கற்சிலை செய்த கற்றச்சன்—இரு
கைதொழும் கோவிலின் வேலன்
நற்கலை ஈபவன் யாவன்—இதை
நன்கு விளக்கிடு தம்பி!
முற்றும் இசைத் தொழிலாளி—வாய்
மூடி அருள் செய்யும் கண்ணன்
நற்சுவை தந்தவன் யாவன்—நீ
நன்றி செலுத்துதல் யார்க்கு?

கடவுள் அணிந் திட்டமாலை—பூங்
காவிற் சிரிக்கின்ற முல்லை
உடைபட்ட நெஞ்சத்தில் தம்பி—நல்ல
உயிர் கொண்டு சேர்ப்பது யாது?
படைகொண்ட மன்னவன் செங்கோல்—சிறு
பண்ணையிலே பொதுத் தன்மை
எடை போட்டு நீ கூறுவாயோ—இங்கு
எது நன்மை எதுதீமை தம்பி!

சொய்தான பிழையான புதுநூல்—பிறர்
நூல் கண்டு செய்திட்ட பெருநூல்
வையத்தில் எதுதம்பி வேண்டும்—நீ
வாய்விட்டு விள்ளுவாய் தம்பி!
உய்யும் புரோகிதத் தந்தை—அவன்,
உத்தியோகம் பார்க்கும் மைந்தன்
செய்யும் திருத்தொண் டிரண்டில்—தம்பி
செம்மையாம் ஒன்றினைக் கூறு.

# வாய்மை முரசு

———:———

மனிதன் உண்போன் ; மற்றவும் உண்பன!
மற்றவை உறங்கும் ; மனிதனும் உறங்குவான் !
இன்புறும் பிறஉயிர் ; இவனும் ஆங்ஙனே !
துன்புறுவான் இவன் ; துன்புறும் பிறவும் !
மனிதன் அறிபவன் ; மற்றவும் அறிவன !
மனித னுக்கு ; மற்ற உயிர்கட்குக்
குறிகள் உண்டு ; நெறிகள் உண்டு !

மனிதன் ஏன் நிலத்தில் வாய்த்த உயிர்களில்
"இனியோன்" "சிறந்தோன்" எனப்படு கின்றான் ?
முளைத்த விலங்கு முதற், சுள் ளான்வரை
உள்ள உயிர்கட் கில்லாத தென்ன ?
மனித னிடத்தில் வாய்த்த சிறப்பெது ?
கேளீர், அதனைக் கேளீர், கேளீரே.

" உள்ளம் கண்டதை உள்ளவர்க் குரைத்தல் "
என்பது, மனித னிடத்தில் தானுண்டு !
பிற உயிர்களிடம் பிரசாரம் செய்யும்
தனி ஒருமேன்மை சற்றும் இல்லை ;
இம்மி கூட இல்லை என்ற றிக !
உள்ளங் கண்டதை உலகுக் குரைத்தல்
மற்றவற் றினின்று மனிதனைப் பிரிப்பது ;
மனித னுக்கு மாண்பு தருவது !

அஞ்சியோ பிறர்பால் ஆவது கருதியோ,
வயிறு தன்னை வளர்க்க எண்ணியோ,
பெற்றதன் கொள்கையைப் பிறர்கை மாற்றுவோன்
உற்ற துரைக்கும் ஒழுக்கம் தீர்ந்தவன்,
தாழ்ந்த சுள்ளானில் தாழ்ந்தவ னுவான்.

மனித ருள்ளும் மனிதத் தன்மை
"கொள்கை" என்று கூறுவர் அறிஞர்
கொள்கையை விலைக்குக் கொடுக்கும் மனிதன்
மனித ருள்வாய்த்த மனித விலங்கு!
நெஞ்சை ஒளித்துப் பேசுதல்
வஞ்ச மன்றே மாநிலத்தீரே!

# விடுதலையே

உன்னைத் தான் விடுதலையே,
உள்ளத்தின் ஒளியே,
ஓடிவா திராவிடத்தில்
ஏ செஞ்சொற் கிளியே

தின்னத்தான் சோறில்லை செம்மைக்கோர் வழியில்லை
என்போர்கள் இல்லாமே எல்லார்க்கும் நலம் அருள்வாய்
உன்னைத்தான் விடுதலையே!

உள்ளத்தே நீதான்
உணர்வினிலும் நீயே
ஓடிவா திராவிடத்தில்
ஏ அன்புத் தாயே

கள்ளத்தார் கொந்தாமல் கண்ணீர்தான் சிந்தாமல்
வெள்ளத்தேன் அவரவரின் வீதத்தால் பொழிபவளே
உன்னைத்தான் விடுதலையே!

ஒருமனிதன் வாட
ஒப்பா நன் னிலையே!
ஓடிவா என் நாட்டினில்
ஏ இன்பப் பொருளே

திருவுடையார் பிடிவாதஞ் செய்தீய்மை எதிர்மோத
வரும்அனலே, மக்களெலாம் வாழ்த்துகின்ற ஒளிவிழியே
உன்னைத்தான் விடுதலையே!

இசையமுது : இரண்டாம் பகுதி

# * சிறுவர் *

# கல்வி

கல்வியின் மிக்கதாம் செல்வமொன் றில்லையே
கண்மணி கேளடா நீ என்றன் சொல்லையே!
செல்வம் பிறர்க்குநாம் தந்திடில் தீர்ந்திடும்
கல்வி தருந்தொறும் மிகச் சேர்ந்திடும்.

கல்வியுள்ளவரே கண்ணுள்ளார் என்னலாம்
கல்வியில்லாவர் கண் புண்ணென்றேபன்னலாம்
கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை!
கற்பதுவே உன் முதற் கடமை.

இளமையிற் கல்லென இசைக்கும் ஔவையார்
இன்பக் கருத்தைநீ சிந்திப்பாய் செவ்வையாய்!
இளமை கழிந்திடில் ஏறுமோ கல்விதான்?
இப்பொழுதேயுண் இனித்திடும் தேன். (கல்)

# பிள்ளைக்கு நீதி

சோம்பிக் கிடப்பது தீமை—நல்ல
தொண்டுசெயாது கிடப்பவன் ஆமை!
தேம்பி அழும் பிள்ளைபோல—பிறர்
தீமையை அஞ்சி நடப்பவன் ஊமை!

புதுமையிலே விரைந்தோடு—ஒன்று
போனவழிச் செல்லும் மந்தையில் ஆடு!
எதிலும் நிசத்தினைத் தேடு—பொய்
எவர்சொன்ன போதிலும் நீ தள்ளிப்போடு.

தேகத்திலே வலி வேற்று—உன்
சித்தத்திலே வரும் அச்சத்தை மாற்று!
ஊக்கத்திலே செயல் ஆற்று!—தினம்
உன்னருமைத் தமிழ் அன்னையைப் போற்று.

பசிவந்த போதுண வுண்ணு—நீ
பாடிடும் பாட்டினி லே சுவைநண்ணு!
வசித்திடும் நாட்டினை எண்ணு—மிக
வறியவர்க்காம் உபகாரங்கள் பண்ணு.

பொய்யுரைப் போன் பயங்காளி—பிறர்
பூமி சுரண்டிடு வோன் பெருச்சாளி
வையக மக்கள் எல்லோரும்—நலம்
வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி.

# வறுமையிற் செம்மை

—:—

**மகள் சொல்லுகிருள் :**

அம்மா என் காதுக்கொரு தோடு—நீ
அவசியம் வாங்கி வந்து போடு!
சும்மா இருக்க முடி யாது—நான்
சொல்லிவிட்டேன் உனக்கிப் போது! (அம்)

**தாய் சொல்லுகிருள் :**

காதுக்குக் கம்மல் அழ கன்று—நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகு பணிவாய்—நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய்! (கா)

**மகள் மேலும் சொல்லுகிருள் :**

கைக் கிரண்டு வளையல் வீதம்—நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
பக்கியென் றென்னை யெல் லோரும்—என்
பாடசாலையிற் சொல்ல நேரும்! (கைக்)

**தாய் சொல்லும் சமாதானம் :**

வாரா விருந்து வந்த களையில்—அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதி துலங்கு—பெண்ணே
அவர் சொல்வ துன்கைக்கு விலங்கு! (வாரா)

**பின்னும் மகள் :**

ஆபர ணங்கள் இல்லை யானால்—என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால்?
கோபமோ அம்மா இதைச் சொன்னால்—என்
குறை தவிர்க்க முடியும் உன்னால். (ஆப)

**அதற்குத் தாய் :**

கற்பது பெண் களுக்கா பரணம்—கெம்புக்
கல்வைத்த நகை தீராத ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு—தன்
கண் ணில் ஒற்றிக் கொள் ளுமன் போடு! (கற்)

## மாணவர்க்கு எழுச்சி

—:—

நிற்கையில் நிமிர்ந்து நில்! ந
டப்பதில் மகிழ்ச்சி கொள்!
சற்றே தினந்தோறும் விளையாடு
பற்பல பாட்டும் பாடிடப் பழகு!—நீ
பணிவாகப் பேசுதல் உனக் கழகு! (நிற்)

கற்பதில் முதன்மை கொள்
காண்பதைத் தெரிந்துகொள்
எப்பொழுதும் மெய்யுரைக்க அஞ்சாதே!
சுற்றித் திரிந்திடும் துஷ்டர் சிநேகம்
தொல்லை என்பதி லென்னசந் தேகம்? நீ (நிற்)

சித்திரம் பயின்று வா
தேன் போன்ற கதை சொல்
முத்தைப்போலே துவைத்த உடையணிவாய்
புத்தகம் உனக்குப் புத்துயிர் அளிப்பதாம்;
போக்கடிக்காதே இதை நான் சொல்லவோ—நீ (நிற்)

பத்திரி கைபடி
பலவும் அறிந்து கொள்
ஒத்துப் பிறர்க்கு நலம் உண்டாக்கு!
நித்தமும் திரவிடநாடு தன்னை
நினைத்துப் பொதுப் பணிசெய் அவளுனக் கன்னை. (நிற்)

# நல்லினஞ் சேர்தல்

—::—

சேரிடம் அறிந்துசேர் எந்நாளும் — மைந்தா
தீயரை அணுகிடிற் பழி மூளும்!
சீரிய ஒழுக்கம்
சிறந்தநூற் பழக்கம்
ஆரிடம் உள்ளதோ அன்னவரிடமே — நேயம்
ஆகுதல் அல்லவோடா உன் கடமை!

மண்ணின்குணம் அங்குள்ள நீருக்குண்டு — மைந்தா
மாலையில் மலர்மணம் நாருக்குண்டு.
திண்ணம் பன்றியொடும்
சேர்ந்த கன்றும் கெடும்!
கண்செய்த குற்றம் தீயர் தமைக்கண்டால் — மைந்தா
கை செய்த நலம் நல்லார் அடி தீண்டல்

சடுதியிலே தீயர் சகவாசம் — பிராண
சங்கடம் உணர் இந்த உபதேசம்.
தடையிதில் ஏது
தாய் எனக் கோது?
சுடுநெருப் பானவரின் குணம் தெரிந்து — மைந்தா,
சுப்புரத்தினம் சொல்லும் அமுதருந்து! (சேரிடம்)

# வழி நடத்தல்

—::—

மரங்கள் அடர்ந்திருக்குங் காடு — கரு
வானில் உயர்ந்த மலை மேடு — தம்மில்
பிரிந்து பிரிந்து செல்லும் வழியாய் — நாம்
பிரியத்துடன் நடப்போம் விரைவாய்
பெருங் குரலில் பாட்டும்
பேச்சும் விளையாட்டும் — நம்மை
விரைவில் அவ்விடம் கொண்டு கூட்டும்!

இளமை தன்னில் வலிமை சேர்ப்போம் — நாம்
எதிலும் தைரியத்தைக் காப்போம், — நாம்
அளவில் லாத நாள் வாழ — உடல்
அழகும் உறுதியு முண்டாக,
ஆசை கொண்டு நடப்போம்
அச்சமதைத் தொலைப்போம் — நம்
நேசர் பலரும் மனங் களிப்போம். (மரங்கள்)

# நிலாப் பாட்டு

நிலவே நிலவே, எங்கெங்குப் போனுய் ?
உலக முற்றும் உலவப் போனேன்.

உலாவல் எதற்கு விலாசத் தீபமே?
காடும், மலேயும், மனிதரும் காணவே.

காண்ப தெதற்குக் களிக்கும் பூவே ?
சூரிய வெப்பம் நீங்கிக் குளிர.

குளிர்ச்சி எதற்கு வெளிச்சப் பொருளே ?
செய்யுந் தொழிலிற் சித்தங் களிக்க.

சித்தங் களிக்கச் செய்வ தெதற்கு ?
நித்தமும் நாட்டை நிலேயில் உயர்த்த.

நாட்டை உயர்த்தும் நாட்டம் எதற்கு ?
வீட்டைச் சுரண்டும் அடிமை விலக்க,

அடிமை விலக்கும் அதுதான் எதற்கு ?
கொடுமை தவிர்த்துக் குலத்தைக் காக்க.

குலத்தைக் காக்கும் குறிதான் எதற்கு ?
நிலத்துச் சண்டையைச் சாந்தியில் நிறுத்த.

சாந்தி ஆக்கும் அதுதான் எதற்கோ ?
ஏய்ந்திடும் உயிரெலாம் இன்பமாய் இருக்கவே.

பதந்தனில் இன்ப வாழ்வுதான் எதற்கோ ?
சுதந்திர முடியின் சுகநிலே காணவே !

# தோட்டம்

—::—

ஊருக்குப் போய்வரும் நாளையிலே—மிக
உரத்திடும் வெய்யில் வேளையிலே

ஆருக்கும் தாங்காத பசிகொண்டு—நான்
அங்கொரு தோட்டத்தில் புகக் கண்டு

பழங் கொடுத்தது மாமரம்—என்
பசி தொலைத்தது மாமரம்

நிழல் கொடுத்தது மாமரம்—துயர்
நீங்க வைத்தது மாமரம்

தாகம் தணித்தது தென்னைமரம்—மணம்
தந்து மலர்ந்தது புன்னைமரம்—உற்

சாகம் பிறந்தது வீடுவந்தேன்—மரம்
உதவி செய்ததை நான் நினைந்தேன்.

# சுகாதாரம்

எடுப்பு

நோயினைப் போய் அழிப்பாய்
நூறாண்டு வாழ்வாய்! (நோ)

உடனெடுப்பு

ஆயநன் னெஞ்சில் வேண்டும்நல் வீரம்
தேயத்தில் தேகத்தில் வேண்டும்சுகா தாரம் (நோ)

அசுத்தமும் இருட்டும் புறத்தும் நல் லகத்தும்
அகற்றுக நீ தமிழா ஆநந்தம் உனை நத்தும் (நோ)

வாழ்க்கையின் நடுவே வரஎண் ணும் சாவைப்
போக்கிட நோய்களில் அசுத்தத்தில் "தீ" வை! (நோ)

அயர்வினில் தொடரும் துயரெனும் சேதி
அறிவுலகினில் இல்லை: ஏறடா அதன் மீதில்! (நோ)

இசையமுது : இரண்டாம் பகுதி

* திராவிடர் *

# திராவிடர்

—::—

இடியப்பக் காரா—ஓ—இடியப்பக் காரா !

விடியற் காலம் தட்டைத் தூக்கி
வீட்டார் கேட்கக் கூவி வந்தாய்
இடியப்பக் காரா !

செப்ப னிட்ட வீட்டுக் காரன்
தெலுங்கு பேசும் மீசைக்காரன்
அப்பமு வெல ஏமி என்றான்
அயலான் அவன் என நினைத்தாய்
எப்படி அவன் அயல் ஆவான்
இன ஒழுக்கம் குறைந்த துண்டோ ?
செப்பும் மொழி தெலுங் கென்றால்
தெலுங்கு மொழியும் உன் உடைமை !
இடியப்பக் காரா !

அடிமரமே ஒன்றேடா
அதன் பெயர்தி ராவிடமே
தடங்கிளைகள் ஐந்தல்லவா
தமிழ், தெலுங்கு, கேரளமே,
அடடேகன் னடம், துளுவம்,
ஐங்கிளைக்கும் அடிஒன்றே
கொடிது கொடிது தெலுங்கனைநீ
குறைகூறும் மனப்பான்மை
இடியப்பக் காரா !

ஐந்து நிறத்தில் மணிக் கோவை
அவற்றூடே செல்லுவது
பொன்னிழையே அல்லாமல்
பூஞூலா சொல்லிடுவாய்
சென்னைக் காரன் கோழி என்பான்
தெலுங்குகாரன் கோடி என்பான்
கன்னடத்தான் கோளி என்பான்
களிச் சேரலன் கோலி என்பான்

துளுவக் காரன் கோழ் என்பான்
சொன்ன இந்த ஐந்திலும் நீ
ஒளிக்கும் உயிரைப் பார்த்த துண்டோ
உள்ள பொதுமை கண்ட துண்டோ
தெளிவி லார்க்கும் தெரிவியடா
திராவிடம்! தி ராவிடமே!!
ஒளிக்காதே உன் மனத்தை
உயர் தெலுங்கன் நம்மவனே
இடியப்பக் காரா!

தெலுங்கனா உன் பகைவன்? ஒரு
சேரலனா உன் பகைவன்?
துலங்கும் ஒரு கன்னடனா?
துளுவனுமா உன் பகைவன்?
உலர்சருகே இவர்களெலாம்
உன்பகைவர் என்றுசொன்னால்
நலம்புரியும் உறவினர்கள்
நாட்டிலெவர் தாம் உனக்கு?
இடியப்பக் காரா!

தெலுங்குகாரன் நாட்டாட்சி
செய்யும் நிலை வந்துவிட்டால்
தெலுங்கருக்கே நல மெல்லாம்
செய்திடுவான் என்கின்றாயா ?
மலையாளி நாடாண்டால்
மலையாளத் தார்களுக்கே
நலம் புரிவான் என்கின்றாயா ?
நல்ல கரடி உன் கரடி
இடியப்பக் காரா !

இரட்டி செய்த ஆட்சியிலே
இரட்டி யார்க்கே நாட்டை எல்லாம்
புரட்டி விட்டான் என்று நீயே
புளுகியதும் உண்டல்லவா ?
விருப்பமுடன் வேளா என்
வேளாளர் தங்களையே
உருப்படச்செய் தான் என நீ
உளருவதும் உண்டல்லவா ?

வரிந்து கட்டி வன்னியனும்
வன்னியர்க்கே நன்மையெலாம்
புரிந்து விட்டான் என்று மனம்
புழுங்கியதும் மெய்தானே ?
துருக்கன் ஒரு தென்னாட்டான்
துருக்கருக்கே நலம்புரிவான்
சிரிக்கும்படி இப்படி நீ
செப்புவதும் உண்டல்லவா ?
இடியப்பக் காரா !

நாவலந்தீ வொன் றதிலே
நவிலும் இரண் டுலகம் உண்டு
மூவேந்தர் கொடிபறக்க
முத்தமிழின் நலம் சிறக்கத்
தேவைஎலாம் கொண்ட திரா
விடஉலகம் ஒன்ருகும்!
ஆஓட்டி ஆத்தின்னும்
ஆரியநா டொன்ருகும்!

நடுவிலொரு விந்தியமாம்!
நல்லதிரா விட நாடு.
கடல் மூன்றும் புடைசூழும்
கவினுறு தென் பாங்கினிலே!
வட நாட்டில் திரவிடர்கள்
வாழுகின்ருர் அங்கவர்கள்
வடவர்கள்தாம் என்பதான
மனநிலைகொண் டவராவார்

வடுவிலாத் திராவிடத்தில்
வடவர்களைச் சேர்ந்தசில
மடயர்களும் உண்டப்பா
வயிற்றெரிச்சல் கூறிடுவேன்
இடவிரும்பும் திரவிடத்தில்
இரந்துண்டு வாழுமந்தக்
கடையர்க்கோ திரவிடரைக்
கவிழ்ப்பதுதான் பெருநோக்கம்
இடியப்பக் காரா!

இந்நிலையில் திரவிடன்நீ
என்ன நினைத் திடவேண்டும்?
நின்இனத்தார் பெற்ற பேறு
நீ பெற்ற பேறல்லவா?
கன்னடனே, கேரளனே,
கன்னனே, மண்ணனே,
வன்னியனே, மன்னவனே,
எல்லாரும் திரவிடரே!
இடியப்பக் காரா!

திரவிடத்தின் தீமை எலாம்
திரவிடரின் தீமை என்க
திரவிடத்தின் நல மெல்லாம்
திரவிடரின் நல மென்க
மருளாதே அஞ்சாதே
வடவர்களை நீக்கிடுவாய்
திரவிடத்தில் திரவிடரின்
ஆட்சியைஉண் டாக்கிடுவாய்
இடியப்பக் காரா!

# தாயகமே வாழி

—::—

தாயகமே வாழி
தமிழ்—கேரளந் தெலுங்கு துளுகன் னடமுறு
தாயகமே வாழி

அலைமிகு காவிரி வெள்ளம் போலே
அறிவொளி சேர்க்கும் கல்வியி னாலே
நிலையினி லோங்கி வன்பகை வாட்டி
நீணிலம் வாயார வாழ்த்தவே எங்கள்
தாயகமே வாழி

வானமேலேற தாய் மணிக்கொடி !
வளர்க வீடெலாம் செங்குட்டுவன்கள் !
வளமே ஓங்குக ! நல்லற மாதர்
மகிழ்வே பொங்குக உலகினில் எங்கள்
தாயகமே வாழி

வினோதன் அச்சகம், 33, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

# அடுத்து வருவன

•

காப்பியம் :

காதலா? கடமையா?

தமிழச்சியின் கத்தி

நாடகம் :

சேர தாண்டவம்

படித்த பெண்கள்

---

பாரதிதாசன் பதிப்பகம்

— புதுச்சேரி —

Jacket printed at Shanti Press, Madras-1